Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC.No.57/2017 | | |
| Witness for Complainant | : PW.11– Chief and Cross | | |
| Name | : திரு. சம்பத்குமார் | Taluk : | ஊத்தங்கரை |
| Father's / Husband Name | : | Calling : | |
| Village | : | Age : | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 24.06.2025.

துவக்க நேரம்– 12.26 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் , மாவட்ட குற்ற பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.02.2017 ம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திருமதி. சாந்தி என்பவர் புகாரை பெற்று ஊத்தங்கரை காவல் நிலைய குற்ற எண் 41/2017 இ.த.ச பிரிவுகள் 279, 337,304–A –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பை என் பார்வைக்கு வைத்தார். நான் வழக்கை அன்றே புலன் வசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 10.30 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் வேடியப்பன், ஈஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். (**மாதிரி வரைபடம்**

**அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்பு ஊத்தங்கரை அரசு மருத்துவனைக்கு சென்று இறந்த போன சத்தியவதி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பின்பு இறப்பிற்கான காரணம் வேண்டி பிரேத பரிசோதனை அறிக்கை செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்துடன் சத்தியமூர்த்தி என்பவரிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். ( **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியிடு செய்யப்படுகிறது.)**

4. பின்பு சாட்சிகள் பெரியசாமி, பெருமாள், மாது, வேடியப்பன், ஈஸ்வரன், பழனிச்சாமி, பூவரசன், பிரியதர்ஷினி, பழனி சிவானந்தம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை 07.02.2017–ம் தேதி 11.00 மணிக்கு காவல் நிலையம் முன்பு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

5. மேலும் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட TN–25–E–7931, TN–04–P–0617, TN–09–BQ–0703 ஆகிய மூன்று வாகனங்களையும் இரு மோட்டார் வாகன ஆய்வாளர்களிடம் ஒப்படைத்தேன். பின்பு 22.03.2017–ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றேன். (**மேற்படி வாகன அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.7, 8, 9 ஆக குறியீடு செய்யப்படுகின்றன).**

6. இவ்விபத்தில் காயம்பட்ட பழனிச்சாமி, பிரியதர்ஷினி, பூவரசன், பழனி மற்றும் இவ்விபத்தில் இறந்த சத்தியவதி என்பவரது பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் சித்ரா என்பவரை 22.03.2017 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயச்சான்றிதழ்கள் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். (**காயச்சான்றிதழ்கள் முறையே அ.சா.ஆ.10, 11, 12, 13 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன).**

7. மருத்துவரின் காயச்சான்றின் படி சட்டப்பிரிவை இதச பிரிவு 279, 337, 338, 304(A)–ஆக பிரிவு மாற்றம் செய்தேன். (**சட்டப்பிரிவு**

**மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு முதல் நிலைய காவலர் சத்தியமூர்த்தி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் சாந்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

8. சாட்சி, சான்றாவணங்கள் அடிப்படையில் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 337, 338, 304–A கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. இவ்வழக்கில் புகார் கொடுத்த நபர் காயம்பட்ட நபருக்கு உறவினர் என்றால் சரிதான். இந்த விபத்தில் காயம்பட்ட பழனிச்சாமி என்பவர் தனது வாகனத்தில் 3 நபர்களை அமர வைத்து மொத்தம் 4 நபர்கள் பயணித்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. ஒரு இருச்சக்கர வாகனத்தில் 4 நபர்கள் பயணிக்க கூடாது என்றால் சரிதான். இது போக்குவரத்து விதிகளுக்கு முரணானது என்றால் சரிதான். 4 நபர்களும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான்.

3. எந்த இரு வாகனங்களும் மோதி கொண்டது என்பதை எனது விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன், Honda Shine இருச்சக்கர வாகனமும், எதிரி ஓட்டி வந்த வாகனமும் மோதிக்கொண்டது. அதன்பிறகு பழனி என்பவர் ஓட்டி வந்த TVS–XL வாகனம் வந்து மோதிக்கொண்டது.

4. பள்ளி வாகனம் பொதுவாக மெதுவாகதான் இயக்கப்படும் என்றால் சரிதான், ஆனால் எதிரி அவ்வாறு ஓட்டி வரவில்லை. இருச்சக்கர வாகனத்தில் 4 நபர்கள் சட்ட முரணாக பயணித்ததாகவும், பாரம் தாங்காமல் நிலை தடுமாறி பழனிச்சாமி ஓட்டி வந்த வாகனம் கீழே விழுந்து இழுத்துச்சென்று சரியான பாதையில் வந்த எதிரியின் வாகனத்தின் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும், இந்த விபத்திற்கு பழனிச்சாமிதான் காரணம் என்றாலும் சரியல்ல.

5. விபத்தில் இறந்த மற்றும் அடிப்பட்ட நபர்களுக்கு இழப்பீடு பெற்றுதர வேண்டி பெறப்பட்ட புகாரின் மீது நான் சரிவர விசாரணை மேற்கொள்ளாமல் ஆவணங்கள் அனைத்தையும் காவல் நிலையத்தில் தயார் செய்து எதிரிக்கு எதிராக நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்– 01.10 PM

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/- Tr. S. Munusamy, B.Sc., B.L.,
Judicial Magistrate,
Uthangarai.